# 5

# கிறிஸ்து: பாவிகளின் சிநேகிதர்

ஒருவேளை யூதமதத் தலைவர்கள் இயேசுவிடத்தில் கண்டுபிடித்த மாபெரும் தவறே அவருடைய மாபெரும் சொத்து எனலாம். அவர்களுக்கு கர்த்தரைக் குறித்த மிகப்பெரிய எதிர்மறைக் காரியங்களே நமக்கு மிகப் பெரிய நேர்மறைக் காரியங்கள். அவர்கள் அவரிடத்தில் கண்டுபிடித்த "தவறு" தான் நாம் அவரிடம் அன்பு வைக்க காரணமாயிற்று: இயேசு பாவிகளுக்கு சிநேகிதனாயிருக்கிறார் என்றனர். இந்த வகையில் அவரைப் படம் பிடித்துக் காட்டும் ஐந்து வசனப் பகுதிகளை லூக்கா சுவிசேஷத்திலிருந்து காண்போம்.

1. *லூக்கா 5:29-32 (மத்தேயு 9:10-12; மாற்கு 2:15-17யும் காண்க).* மத்தேயுவை இயேசு அழைத்து தமது சீஷனாக வரும்படி கூறிய பின், "அநேக ஆயக்காரரும் பாவிகளும் வந்து, இயேசுவோடும் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள்" என்று நமக்கு சொல்லப்படுகிறது (மத்தேயு 9:10). பரிசேயர்கள் அவரை இகழ்ந்தபோது இந்த நிகழ்ச்சியின் போது, அவர் மாறுத்தரமாக, "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை" என்றார் (லூக்கா 5:31).

2. *லூக்கா 7:34.* மதத்தலைவர்களிடம் இயேசு சொன்னார், "மனுஷகுமாரன் போஜன பானம் பண்ணுகிறவராய் வந்தார், அதற்கு நீங்கள், 'இதோ, போஜனப் பிரியனும் மதுபான பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறீர்கள்!' " இந்தக் குற்றச்சாட்டின் முன்பகுதியின் - போஜனப் பிரியன் மதுபான பிரியன் - என்ற குற்றச்சாட்டை அறியாமைக்காக இயேசு வாதாடியிருக்க வேண்டும். இரண்டாவது குற்றச்சாட்டுக்கு, அவர் குற்றம் என்றே வாதாட விருப்பமாயிருந்தார்! அவர் ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் தான்!

3. *லூக்கா 7:36-50.* இந்த வசனப் பகுதியில், இயேசு இரண்டுவகையான பாவிகளுக்கு தாம் சிநேகிதன் என்பதை விளக்கப் படுத்துகிறார்:

> *பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம்பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்; அவர் அந்தப் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்து பந்தியிருந்தார். அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டுவந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடையப் பாதங்களை முத்தஞ் செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள். அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, "இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும்*

*அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்" (லூக்கா 7:36-39).*

பாவியான இந்த ஸ்திரீக்கு இயேசு தாம் சிநேகிதன் என்று நிரூபித்தார் என்பது தெளிவு. தனக்கு விருந்து அளித்தவருடைய அசட்டைக்கும், அவரிடம் அன்புகாட்டிய அவளுக்கும் இருந்த முரண்பாட்டை இயேசு காட்டினார். அவர் ஸ்திரீயினிடத்தில், "உன் பாவங்கள் மன்னிக்கப் பட்டது" என்றார் (லூக்கா 7:48). அந்த பரிசேயன் பாவியான ஸ்திரீக்கு சிநேகிதன் அல்ல, ஆனால் இயேசு சிநேகிதனாய் இருந்தார்! இயேசு அகந்தை நிறைந்த பரிசேயனுக்கும் கிறிஸ்து சிநேகிதனாயிருந்தார் மற்றும் அவனுக்கு சத்தியத்தை புரியவைக்க உதவினார்.

4. *லூக்கா 15:1, 2.* "சகல ஆயக்காரரும் பாவிகளும் அவருடைய வசனங்களைக் கேட்கும்படி அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள்" (லூக்கா 15:1). இதன் விளைவாக, "பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து: இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்" என்றார்கள் (15:2). இயேசு உவமையோடு ஒப்பிட்டு இழந்து போனவைகளை (காணாமல் போனவைகளைக்) கொண்டு, விளக்கப்படுத்தி தாம் மாத்திரமல்ல, தேவனும் அவர்களை அன்புகூருவதாகக் குறிப்பிடுகிறார். எனவே, தம்மைக் குற்றப் படுத்துகிறவர்கள் தமது முன்மாதிரியை பின்பற்றும்படி சுட்டிக் காட்டுகிறார்.

5. *லூக்கா 19:1-10.* மற்றொரு முறை, இயேசு சகேயு என்பவனுடைய வீட்டிலே புசிக்கும்படி சென்றார், அவன் ஒரு ஆயக்காரனாயிருந்தான், மீண்டும், ஜனங்கள் அவருக்கு விரோதமாய் முறுமுறுத்து, "இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்றார்கள்" (லூக்கா 19:7). இயேசு அதற்கு மறுமொழியாக, "இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்றார் (லூக்கா 19:10).

பாவிகளுடனான இயேசுவின் நட்பு இன்று பரிசுத்தவான்களுக்கும் பாவிகளுக்குமான பாடமாக உள்ளது.

## இயேசுவை பின்பற்றுவோர் பாவிகளுடன் சிநேகிதர்களாயிருக்க வேண்டியவர்கள்

இயேசு பாவிகளுக்கு சிநேகிதனாயிருந்ததாலும், கிறிஸ்தவர்கள் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டியவர்களானதாலும், நாமும் பாவிகளுக்கு சிநேகிதர்களாயிருக்க வேண்டியவர்கள். கிருபையாய் இரட்சிக்கப் பட்டிருப்பவர்கள் இன்னமும் தங்கள் பாவங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை அணுகி போதிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நாம், உலகத்து மக்களுக்கு அப்பாற்பட்ட வாழ்கைகையை வாழக் கூடாது, வாழ முடியாது. நம்முடைய இரட்சகரைப் போலவே, இழந்துபோனவர்களைத் தேடவும் இரட்சிக்கவும் வேண்டியவர்கள் (லூக்கா 19:10). இழந்துபோனவர்களுடன் தொடர்பு கொள்ளாத பட்சத்தில் நாம் அதை சாதிக்க இயலாது. இதற்காக, நாம் பாவிகளையும் மற்றவர்களையும் நட்பாக்கி நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே அவர்களைச் சந்திக்க முடியும், அவர்களுக்கு உதவிட முடியும், அவர்களை நம்மிடம் ஈர்ப்புக் கொள்ளச் செய்ய முடியும், நன்மை செய்து, மேலும், முற்றிலுமாக, கர்த்தரை அறிந்து கொள்ள உதவ முடியும்.

ஆனால், நம்முடைய பாவிகளுடனான நட்பு நம்மையும் அவர்களுடைய பாவங்களுக்கு உட்படுத்த விடக்கூடாது (1 தெசலோனிக்கேயர் 5:22), ஆகாத நட்புகளால் நம்முடைய நல்லொழுக்கம் கெட்டுவிடக் கூடாது (1 கொரிந்தியர் 15:33), அல்லது சோதனைக்கு நம்மையும் உட்படுத்த விட்டுவிடக் கூடாது (கலாத்தியர் 6:1). இந்த விதிவிலக்குகளோடு, கிறிஸ்தவர்கள் பாவிகள் மத்தியில் தனிப்பட்டவர்களால் சுய - நீதியுள்ளவர்களாயிருக்கக் கூடாது.

என்னுடைய அனுபவத்தில், பாவிகளுக்கு சிநேகமாயிருக்கிற விஷயத்தில் சபை பொதுவாக நன்றாக செயல்பட்டுள்ளது. எனக்குத் தெரிந்த விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் சமுதாயத்தில் முக்கிய பங்காற்றி அவர்களுக்குள்ளாக வாழ்ந்து அவர்களில் ஒவ்வொருவரையும் நண்பர்களாக்கி வித்தியாசப்பட்ட மார்க்க உணர்வுகளைக் கொண்டவர்களையும் பாவிகள் என்று பெயரெடுத்தவர்களையும் கூட நட்பாக்கிக் கொண்டுள்ளனர். கிறிஸ்தவர்கள் சுய நீதியுள்ளவர்களாய், பாவிகள் தங்களுடைய நட்புக்கு அபாத்திரராய்க் கருதுவதும் அது சம்பந்தப்பட்டவைகள் யாவையும், தவறு என்றே கருதுகிறேன்!

கிறிஸ்தவர்கள் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும், அந்த உயர் சிறப்பியல்பு நிலைத்திருக்கிறது. நமது கர்த்தரைப்போல நாம் பாவிகளுக்கும் சிநேகராயிருக்க வேண்டும்.

## இயேசு இன்றைக்கு பாவிகள் இரட்சிக்கப்பட அழைக்கிறார்

இயேசு பாவிகளுக்கு சிநேகிதன் எனும் உண்மை கிறிஸ்தவர்களாக ஒரு போதும் மாறாதவர்களுக்கு ஒரு தனிச் சிறப்பு. அவர் பூமியிலிருந்த நாட்களில் பாவிகளுக்கு சிநேகிதராயிருந்திருப்பாரேயானால், இன்றைக்கும் அவர் பாவிகளுக்கு சிநேகிதராயிருக்கிறார். அவர் “நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்” (எபிரெயர் 13:8). ஆகையால் நீங்கள் ஒரு பாவியாயிருந்தால், அவர் உங்களுடைய சிநேகிதர்! பாவிகளுக்கு அவர் முதல் நூற்றாண்டில் என்ன செய்தாரோ, அதை இன்றும் செய்ய அவரால் முடியும் செய்வார்! அவர் உங்களுடைய சிநேகிதனாயிருப்பார் என்பதற்கு வேதாகமம் குறைந்த பட்சம் ஐந்து வழிகளைக் காட்டுகிறது.

**1. இயேசு பாவிகளின் சிநேகிதராயிருப்பதால், அவர் உங்களை ஏற்றுக் கொள்கிறார்.**

அவர் சேர்ந்து சாப்பிட ஆயக்காரர்கள் மற்றும் பாவிகளை ஏற்றுக் கொண்டது போலவே உங்களையும் ஏற்றுக் கொள்கிறார். தம்மிடத்தில் கொண்டுவரப்பட்ட விபச்சார ஸ்திரீயின் பாவத்தை கண்டுகொள்ளாமல் விடாதது போலவே, எப்படியிருப்பினும், அவர் உங்கள் பாவங்களை ஏற்றுக் கொள்வதில்லை. *இந்த வித்தியாசத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்: இயேசு பாவிகளை ஏற்றுக் கொள்கிறார், ஆனால் அவர்களுடைய பாவங்களை ஏற்றுக் கொள்வதில்லை.*

சிலர் இயேசு பாவிகளை ஏற்றுக்கொள்வது அவர்களின் பாவங்களை கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறார் என்று பொருள் என நினைக்கின்றனர். அப்படியல்ல! விபச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீயினிடத்தில், போ

*"இனி பாவம் செய்ய வேண்டாம்!" என்று சொல்லப்பட்டது. இயேசு பாவத்தை கடுமையாக வெறுத்தார். யோவான் 8:24ன்படி, அவரை விசுவாசியாதவர்கள் அவர்களுடைய பாவங்களில் சாவார்கள் என்று சொன்னார். உங்கள் பாவங்கள் உங்களை கொன்றுபோடும், என்று இயேசு சொன்னார்! இயேசுவைப் பொறுத்தவரையில், உங்கள் பாவங்கள் ஏற்புடைய நடத்தையல்ல.*

*இயேசு பாவத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், ஒரு நபராகிய உங்களை அவர் ஏற்றுக் கொள்கிறார். வேதபாரகரும் பரிசேயரும் பாவிகளை ஒரு நபராகவே பார்ப்பதில்லை, அவர்களுக்கு "சரீர - உருவமில்லை" என்பதாகவும், நீதிமான்கள் அவர்களோடே கலந்திருக்கக் கூடாது என்றும் எண்ணினார்கள். ஒரு காலத்தில் இந்தியாவில் இருந்த "தீண்டாமை" போன்ற குணாதிசயம் இது. அதற்கு மாறாக, இயேசு அவர்களை நிஜமானவர்களாயும் முக்கியமானவர்களுமாய் பார்த்தார். நீங்களும் அப்படித்தான்! இயேசுவுக்கு நீங்கள் விலை மதிப்புள்ளவர்களும் முக்கியத்துவமுள்ளவருமானவர்; நீங்கள் "யாரோ ஒருவர்."*

*மேலும், இயேசுவுக்கு நீங்கள் ''நல்லவராகக் காணப்'' படும் வரையிலோ அல்லது நீங்கள் அவரால் அன்புகூரப்படும் வரையிலோ நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை! "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்," என்று பவுல் சொன்னார் (ரோமர் 5:8). நீங்கள் பாவிகளாயிருக்கையில், பாவிகளாயிருந்தாலும், கிறிஸ்து உங்களுக்காக மரித்தார்.*

***2. இயேசு பாவிகளுக்கு சிநேகிதராயிருக்கிற படியால், உங்கள் ஜீவியத்தை அவர் சிறப்பானதாக மாற்ற முடியும்.***

*இயேசு பாவிகளுடைய பாவத்தை எதிர்க்கிறார் என்று நான் நம்புகிறேன் - யோவான் 4ல் கிணற்றருகே அவர் சந்தித்த ஸ்திரீயைப்போல, லூக்கா 19ல் சகேயு, யோவான் 8ல் விபாச்சாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீ, மற்றும் அவரை தைலத்தால் பாதங்களை கழுவிய பாவமுள்ள ஸ்திரீ - ஆகியோரை மனமாற்றாமல் விடவில்லை. அதற்குப் பின்னதாக, அவர்கள் வாழ்க்கையை எதிர் கொள்ளும் அளவுக்கு தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு, நீதியாக வாழ்ந்து, தேவனைப் பிரியப்படுத்தினார்கள் என்றே நினைக்கிறேன்.*

*பாவங்களை வெறுத்து பாவிகளிடத்தில் கிறிஸ்து தமது செல்வாக்கை நிலை நிறுத்துகிறார் என்பதற்கு ஒரு விளக்க உதாரணம் கதரேன் எனும் நாட்டில் பிசாசினால் பீடிக்கப் பட்டிருந்த நபரிடத்தில் இயேசு வெளிப்படுத்தும் ஒரு ஆர்வமிக்க சம்பவத்தைக் காண்கிறோம் (லூக்கா 8:26-39). அநேகம் பிசாசுகளால் பீடிக்கப்பட்டிருந்த மனுஷனை இயேசு சந்திக்கிறார். அந்த மனுஷனு டைய வாழ்க்கையை பரிதபிக்கத்தக்க வகையில் அந்த பிசாசுகள் செய்து கொண்டிருந்தன. அவன் கட்டுப்படுத்தப்படக் கூடாதவனாய் இருந்தான்; அவன் ஆடையணியாதவனும் குகைகளிலே வாழுகிறவனுமாயிருந்தான். அவனுடைய வாழ்க்கை அர்த்தமற்றதும் எவ்வித மதிப்பும் இல்லாதிருந்தது, அவனுக்கோ அவனால் பிறருக்கோ எவ்வித பயனும் இருக்கவில்லை. இயேசு பிசாசுகளை பன்றிகளின் கூட்டத்திலே விரட்டினார். அந்தப் பன்றிகள் மலையிலிருந்து ஓடிப்போய் சமுத்திரத்திலே அமிழ்ந்து மாண்டன. பட்டணத்திலே பிசாசு பிடித்திருந்த - அவனை அறிந்திருந்த ஜனங்கள் "பிசாசு விட்டுப்போன மனுஷன் வஸ்திரந்தரித்து இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து புத்தி தெளிந்திருக்கிறதை*

*கண்டு; பயந்தார்கள்" (லூக்கா 8:35). அவருடைய வாழ்க்கையில் என்ன ஒரு மாற்றம் வந்திருந்தது! அவன் "புத்தி தெளிவற்றனாயிருந்தான்"; இப்பொழுது புத்தி தெளிந்திருக்கிறவனாயிருந்தான். பயனற்றவனாயிருந்தான்; இப்பொழுது பயனுள்ளவனானான் பரிதபிக்கப் படத்தக்கவனாயிருந்தான்; இப்பொழுதோ திருப்திகரமான மனிதனானான்.*

*அந்த மனிதனுக்கு இயேசு செய்தவை ஒவ்வொருவருக்கும் செய்வார் என்பதற்கான ஒரு விளக்க உதாரணம்! உடைந்து துண்டுகளாகிப் போன உங்கள் வாழ்க்கையை ஒன்றாக்கிட அவர் உங்களுக்கு உதவி செய்வார். உங்களுடைய வாழ்க்கை பரிதாபத்துக்குரிய துவக்கம் பெற்றிருந்தாலும், பாவத்தின் அனைத்து விளைவுகளையும் சரிப்படுத்த இயலாவிட்டாலும், அவைகளை மாற்றிக் கொள்ளவும், புண்ணாக்கிப் போனவைகளை குணமாக்கவும், புதிய துவக்கம் செய்து, வெற்றிகொள்ளவும் அவர் உங்களை ஊக்கப்படுத்துவார்.*

*தேவனுடைய சித்தத்தின்படி வாழ பிரயாசப்படுகிற, ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவன், மிகுந்த சந்தோஷத்துடனும், நிறைவுடனும், பரிபூரணப் பட்டதுமான வாழ்க்கையை வாழுகிறான். அவனோ அவளோ குடும்பத்திலேயே சிறந்த உறுப்பினராக, சிறந்த முறையில் பணி அமர்த்தப்பட்டவராகவோ, அல்லது அமர்த்தியவராகவோ, சமுதாயத்தில் சிறந்த குடிமகனாகவோ விளங்குவார்கள். பாவத்தின் காயங்களை கிறிஸ்து குணமாக்கி சமாதானமும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கையைத் தருவார்.*

### *3. இயேசு பாவிகளின் சிநேகிதராயிருக்கிறபடியால், அவர் உங்களுக்கு பாவமன்னிப்பை அருளுகிறார்.*

*இயேசு உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரிய பிரச்சனையை நீங்கள் உணராவிட்டாலும், இயேசு அதிலே கவனம் செலுத்துகிறார். அது பாவப் பிரச்சனை!*

*இந்த விஷயத்தில், விசேஷமாக, இயேசு பாவிகளின் சிநேகிதராயிருக்கிறார். அவர் நிகரற்ற வகையில் பாவிகளின் சிநேகிதராயிருக்கிறார்! நமக்கு விரோதமாய் யாராவது பாவம் செய்தால், அவர் நமக்கிழைத்த தவறை மன்னிக்கலாம், ஆனால் அவரது பாவம் தேவனுக்கு செய்த தவறை நம்மால் மன்னிக்க இயலாது. ஒவ்வொரு பாவமும் தேவனுக்கு விரோதமாக செய்யப்படுவதால் - அவருக்கு விரோதமாய் செய்யப்பட்ட பாவங்களை அவர் மட்டுமே மன்னிக்க முடியும்! ஆயினும், தேவனுக்கு விரோதமாய் செய்யப்பட்ட பாவங்களை, மன்னிக்க கிறிஸ்துவுக்கு அதிகாரம் உண்டு, ஏனெனில் அவரும் தேவனாக இருக்கிறார் (மாற்கு 2:7).*

*அபிஷேகம் பண்ணின ஸ்திரீயின் பாவத்தை இயேசு மன்னித்தார், விபச்சார ஸ்திரீயின் பாவத்தையும் மன்னித்தார். அவர்களை அவர் மன்னித்திருப்பாரேயானால், உங்கள் பாவங்களையும் அவர் மன்னிப்பார்!*

*பாவம் தேவனிடத்திலிருந்து உங்களை பிரித்து வைத்துள்ளது. அது உங்களை தேவனுக்கு விரோதமான சத்துருவாக்கியுள்ளது. அது உங்களை தேவ கோபாக்கினைக்கு கீழ்ப்படுத்தியுள்ளது. இயேசு பாவங்களை எடுத்துப் போடுகிறார்; பாவங்களை அழித்து விடுகிறார். அவரே பாவத்துக்கு நிவாரணம் செலுத்தியிருக்கிறார். எபேசியர் 2:13 சொல்லுகிறது, "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே*

*சமீபமானீர்கள்.'' ஆகிலும், இயேசு அளிக்கும் பாவமன்னிப்பை சரியாகப் பெற்றுக் கொள்ள நாம்தான் பொறுப்பேற்க வேண்டும்.*

*மன்னிக்கப்பட என்ன தேவைப் படுகிறது? முதலாவதாக, பாவமன்னிப்பின் தேவையை நீங்கள் உணர வேண்டும்: நீங்கள் பாவி என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும், மேலும் நீங்கள் பாவியாயிருக்கிறபடியினாலே, நீங்கள் (ஆத்துமாவை) இழந்தவருமானவர்! இரண்டாவதாக, உங்களை இரட்சிக்க கூடிய ஒருவர் உண்டு என்பதையும் அவர் உங்களை இரட்சிக்க விரும்புகிறார் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்: இயேசு, பாவிகளின் சிநேகிதர்! இயேசு நீங்கள் இருக்கும் பாவச் சேற்றிலும் உளையிலும் இறங்கி உங்களை தூக்கியெடுத்து தமது இராஜ்யத்தின் மகிமையுள்ள வெளிச்சத்திலே கொண்டுவர விரும்புகிறார்! மூன்றாவதாக, நீங்கள் அவருடைய சிநேகிதராக மாற, அவர் ஆவல் கொண்டு உங்களை இரட்சிக்க அனுமதித்து அவருடைய கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்! உங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்புங்கள் (லூக்கா 13:3) பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (மத்தேயு 28:19, 20; நடபடிகள் 2:38).*

### *4. இயேசு பாவிகளின் சிநேகிதரனானபடியால், அவர் உங்களோடு இருப்பார்.*

*இயேசு பரலோகத்துக்கு ஏறிப்போயிருந்தாலும் கூட. அவர் தமது அப்போஸ்தலருடனிருந்தார். அவர்களிடத்தில் அவர், "உலகத்தின் முடிவு பரியந்தம் உங்களுடனே கூட இருக்கிறேன்'' என்றார் (மத்தேயு 28:20). இயேசு ஒரு நல்ல - சீதோஷ்ண சிநேகிதரல்ல; நமது வாழ்க்கை நலமாக போய்க் கொண்டிருக்கையில் மட்டும் அவர் நம்முடைய சிநேகிதரல்ல. எப்பொழுதும் அவர் நம்முடைய சிநேகிதராக இருக்கிறார். வியாதியிலும் ஆரோக்கியத்திலும், செழுமையிலும் வறுமையிலும், நாம் பாவத்தில் வாழுகிற போதும், சுயநலமிக்கவர்களாயிருக்கும்போதும், நல்லவர்களாக வாழும்போதும் அவர் சிநேகிதராயிருக்கிறார்.*

*இயேசு எப்பொழுதும் நம்முடைய சிநேகிதராயிருக்கிறார், நம்மை நன்கு நடத்தும்படி அவர் முடிவு செய்திருக்கிறார். நமக்கு உதவ, நமது இருதயங்களை ஆற்ற, நம்மை மன்னிக்க, நமக்கு நன்மை செய்ய நம்மோடிருக்கிறார். அவருடைய ஆசீர்வாதத்திற்கு இருக்கிற ஒரே வரையறை அவர் அப்படி செய்யாதபடிக்கு நாம் மறுக்கும் போதுதான் (காண்க மத்தேயு 23:37-39). அவர் நமது சிநேகிதராயிருக்க விரும்புகிறார், ஆகிலும் அதை தெரிந்தெடுக்கும் உரிமை நம்முடையது. நாம் அவருடைய நட்பை புறம்தள்ள சுதந்திரம் பெற்றுள்ளோம்.*

*அவருடைய சிநேகிதராயிருக்க நாம் என்ன செய்ய வேண்டும்? இயேசு சொன்னார், "நான் உங்களுக்கு கற்பித்த யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவான் 15:14). அவருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிவதன் மூலம், நாம் அவருடைய சீஷர்களாக, சிநேகிதர்களாக மாறுகிறோம். நாம் அவருடைய சித்தத்தைச் செய்வதால், நாம் அவருடைய நண்பர்களாய் தொடர்ந்து இருக்கிறோம், மற்றும் அவர் நம்மைத் தொடர்ந்து ஆசீர்வதிக்கிறார். நாம் அவருடைய சித்தத்தைச் செய்வதால், நாம் அவருடைய நண்பர்களாய் தொடர்ந்து இருக்கிறோம், மற்றும் அவர் நம்மைத் தொடர்ந்து ஆசீர்வதிக்கிறார், நாம் அவருடைய சீஷர்களாயிருக்கும் போது, நமது*

*சிநேகிதராகிய இயேசு நம்மை பெலப்படுத்தி, நமக்கு உதவி செய்து, - எல்லாவற்றுக்கும் மேலாக - நம்மை மன்னிக்கிறார்.*

***5. இயேசு பாவிகளுக்கு சிநேகிதராயிருக்கிறபடியால், அவர் நித்திய ஜீவனை அளிக்கிறார்.***

*சிலுவையிலே தொங்கிக் கொண்டிருக்கும்போது, - ஒரு பாவியாகிய - கள்ளனாக இருந்தவனைப் பார்த்து சொன்னார், "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசில் இருப்பாய்" என்றார். இயேசு கள்ளனை இரட்சித்து அவனுக்கு நித்திய ஜீவனைக் கொடுத்திருப்பாரானால், பிறகு பாவிகளாகிய உங்களையும் என்னையும் கூட இரட்சிக்கிறார். உண்மையில், இயேசு தம்முடைய சிநேகிதர்களுக்கு அப்படிப்பட்ட பிரதிபலனை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்:*

> *உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன் (யோவான் 14:1-3).*

*என்ன ஒரு அற்புதமான சிலாக்கியம் இது: இயேசுவின் சிநேகிதர்கள் அவரோடு கூட நித்தியத்தை பரலோகத்தில் கழிப்பார்கள் என்று எதிர்பார்த்து காத்திருப்பது!*

## *முடிவுரை*

*நாம் எல்லோரும் பாவஞ் செய்தோம் (ரோமர் 3:23)! இந்த உண்மையினிமித்தம் நமக்கு சிநேகிதராயிருக்க சித்தமுள்ள ஒருவர் நமக்குத் தேவை. இயேசு அந்த தேவையை நிறைவு செய்கிறார் மற்றும் நமக்கு இரட்சிப்பை அளிக்கிறார்.*